**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்.**

**O.S. No. 65 /2020**

**P.W. 1 நாள் – 18.07.2023**

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜன் |
| த /பெயர் | : | பொன்னுசாமிகவுண்டர் |

**குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கிற்கு சம்மந்தப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் கிராம நத்தத்தில் வருகிறது என்றால் சரிதான். எனக்கு எந்த சர்வே எண்ணில் வருகிறது என்றால், இரண்டு சர்வே எண்ணில் வருகிறது. சர்வே எண் ஞாபகமில்லை. என்னுடைய சொத்திற்கும் தெற்கில் பிரதிவாதியின் சொத்து உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு என்ன சர்வே எண்ணில் உள்ளது என்று எனக்கு தெரியாது. என்னுடைய சர்வே எண்ணும், பிரதிவாதியின் சர்வே எண்ணும் வேறு வேறு எண்களில்தான் வருகிறது. ஒரே எண்ணில் வரவில்லை. பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சர்வே எண்ணை அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், எனக்கு ஒதுக்கப்பட்டுள்ள சர்வே எண்ணை நான் அனுபவித்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் நத்தம் சர்வே எண் வந்துவிட்டது என்றால் சரிதான். 45 வருடங்களுக்கு முன்பே நத்தம் சர்வே எண் வந்துவிட்டது.

2. எனக்கு உட்பிரிவு செய்து பட்டா வழங்கப்பட்டுவிட்டது என்று சொன்னால் எனக்கு பட்டாவை தவறாக வழங்கிவிட்டார்கள். எனக்கு எப்போது பட்டா வழங்கினார்கள் என்றால் சுமார் 30 வருடங்கள் இருக்கும். அதில் தவறு உள்ள விவரம் எனக்கு அப்போது தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்புதான் தெரியும். இவ்வழக்கு தாக்கல் செய்து 13 வருடங்கள் ஆகிவிட்டது. இவ்வழக்கில் வருவாய்துறையினரை நான் கட்சி சேர்க்கவில்லை. பிரதிவாதிகள் மீது மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பட்டாவில் தவறு ஏற்பட்டுள்ளதை பிரதிவாதிகள் வந்து சரிசெய்து வைக்கமுடியும் என்று சொன்னால், சரிதான். பிரதிவாதிகளுக்கு பட்டாவை திருத்திக்கொடுக்க அதிகாரம் உள்ளதா என்றால், அதிகாரம் இல்லை. பட்டாவை திருத்தி தர வேண்டும் என்று இவ்வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால், கேட்கவில்லை.

3. நான் வழக்கு தாக்கல் செய்யும்போது, பிரதிவாதிகள் கிரையம் வாங்கிவிட்டார்களா அல்லது பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தர் இருந்தார்களா என்றால் பிரதிவாதிகள் கிரையம் வாங்கிவிட்டார்கள். பிரதிவாதி கிரையம் வாங்கி சுமார் 15 வருடங்கள் இருக்கும். இவ்வழக்கு சொத்துவிவரத்தில் தென்புற சக்குபந்தியாக பிரதிவாதியின் நிலத்தை காண்பித்துள்ளேனா என்றால் காண்பித்துள்ளேன். நான் பிராதில் படித்து பார்த்துதான் கையெழுத்து செய்துள்ளேன்.

பிரதிவாதி சம்பத் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினார். சொத்துவிவரத்தில் ராமசாமிபண்டாரத்தின் வீட்டிற்கும் வடக்கு என்ற உள்ள பகுதி பிரதிவாதியின் சொத்து என்றால் சரிதான். இவ்வழக்கில் செல்வம் என்பவர் மீதுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துவிவரத்தில் பட்டா எண்ணும், சர்வே எண்ணும் குறிப்பிட்டுள்ளேனா என்றால், குறிப்பிடவில்லை.

4. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் பட்டா தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கு சொத்தை அளவீடு செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டுமென்று மனு தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். முதலில் ஒரு ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு சென்ற பின்னர், மீண்டும் தாவா சொத்தை அளவீடு செய்து அறிக்கை, வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். அளவீடு செய்யும்போதே புலவரைபடத்தின் அடிப்படையில் அளவீடு செய்யப்பட்டுள்ளது என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் தாவா சொத்தை அளவீடு செய்யும்போது ஊரில் இல்லை, வெளியூர் சென்றுவிட்டதால் எனது அப்பா தாவா சொத்து அளவீடு செய்யும்போது உடனிருந்தார். பின்னிட்டு எனது தகப்பனார் இறந்துவிட்டார் என்றாலும், வாரிசுகள் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.

5. நத்தம் சர்வே எண்ணை பொறுத்து குறிப்பிட்டு நீதிமன்ற ஆணையரின் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால், எனக்கு தெரியாது.

நீதிமன்ற ஆணையரின் நீ.ம.சா.ஆ.4 அளவீட்டு வரைபடத்தில், சர்வே எண்.290/2 என்னுடைய இடம் என்றும், 290/11 பிரதிவாதியின் இடம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.4 அளவு வரைபடத்தில் P மற்றும் D பகுதிக்கு இடையில் சந்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சந்து 45 வருட காலமாக உள்ளது. அந்த சந்தை பிரதிவாதிக்கும், எனக்கும் பேர்பாதியாக கூரைவாரிக்காக விடப்பட்டுள்ளது. நாளதுவரை எனது வீடும், பிரதிவாதியின் வீடும் மேற்படி சந்தும் அதே அளவில்தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். பிரதிவாதிகள் என்ன இடைஞ்சல் செய்ததாக சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், என்னுடைய நிலத்தை ஒட்டி அஸ்திவாரம் பறிக்க ஏற்பாடு செய்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

6. பிரதிவாதிகளுக்கு வீடு இல்லாததால் கட்டுவதற்கு ஏற்பாடு செய்தார்கள். தற்போது பிரதிவாதிகள் அவர்களுடைய அத்திற்குள் வீட்டை கட்டியுள்ளார்கள். ஆக்கிரமிப்பு செய்யவில்லை. பிரதிவாதிகள் வீடு கட்டி 2, 3 வருடங்களாகிறது. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டுதான் வீடு கட்டியுள்ளார்கள். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்தபோது, பிரதிவாதிகள் வீடுகட்டி முடிக்கவில்லை. அஸ்திவாரம் போட்டிருந்தார்கள். இரண்டாவது நீதிமன்ற ஆணையர் பார்வையிடும்போது, வீட்டை பகுதியாக கட்டி முடித்துவிட்டார்கள். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் என்னுடைய சொத்தின் சர்வே எண், பட்டா

எண் குறிப்பிடாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதற்கு என்னால் காரணம் எதுவும் சொல்ல முடியாது என்றால், சரிதான். என்னுடைய சர்வே எண்ணையும், பட்டா எண்ணையும் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தால் வழக்கு எனக்கு விரோதமாகிவிடும் என்பதால் அவ்வாறு தவிர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு நான் ஆட்சேபணை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வேறு வழக்கறிஞரை நியமித்த பின்பு தாவா சொத்தை அளவீடு செய்ய வேண்டுமென்று மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மனு தாக்கல் செய்தபோது எனது தகப்பனார் உயிருடன் இருந்தார்.

7. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால், எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ளார். எனக்கு தெரியாது. மேற்படி நீதிமன்ற ஆணையருக்கு தாவா சொத்தை மீண்டும் அளவீடு செய்ய வாரண்டை Re Issue செய்ய வேண்டுமென்று மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனது அப்பா தாக்கல் செய்துள்ளார். வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் எனது சொத்தின் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், சாட்சி ஆவணத்தை பார்வையிட்டு சர்வே எண் இல்லை என்றும், கதவு

எண் உள்ளதாகவும் சாட்சியமளிக்கிறார். என்னுடைய வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் சர்வே எண் குறிப்பிடப்படாத நிலையில் நீதிமன்ற ஆணையர் எவ்வாறு கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்தை அளவீடு செய்ய முடியும் என்று கேட்டால், எனக்கு தெரியாது.

8. முதன்முறை நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்தபோது, ஆணையர் கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் அளவீடு செய்ய வேண்டுமென்று கேட்டேனா என்றால், கேட்கவில்லை. தெரியாது என்பதால் கேட்கவில்லை. இருவேறு நீதிமன்ற ஆணையர்களின் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு வேறுபாடு எதுவும் உள்ளதா என்று கேட்டால், வேறுபாடு எதுவுமில்லை. நானும், எனது தகப்பனாரும் எங்களுடைய கிரையப்பத்திரத்திற்கு தகுந்தாற்போல அறிக்கை மற்றும் வரைபடம் வேண்டும் என்பதால் தந்திரமாக மனு தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால், சரியல்ல. இரண்டாம் முறை நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்யும்போது மேற்படி கிரையப்பத்திரம் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான், வழக்கு விசாரணை துவங்கப்படவில்லை என்றால் சரிதான். முன்னரே முதன்முறையாக நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையர் அவருடைய பணியை சரிவர செய்துள்ளார் என்றாலும், அவரேதான் மீண்டும் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றாலும், நீதிமன்ற ஆணையரை மாற்றி உத்தரவு ஏற்பட்டிருப்பது தவறு என்றால், சரியல்ல.

இரண்டாவதாக வேறு வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டு தாவா சொத்தை பார்வையிட்டு அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.

9. மேற்படி வழக்கறிஞர், வழக்கறிஞர் பணியில் தொடர்ந்து இருந்தபோதும், அவரையே நீதிமன்ற ஆணையராக நியமிக்க நடவடிக்கை எடுக்காமல் வேண்டுமென்றே வேறு ஒரு நீதிமன்ற ஆணையரை மாற்றி அளவீடு மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இரண்டாவது நீதிமன்ற ஆணையரும் அளவீடு செய்யும்போது பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் வீடு கட்டுவதை இடையூறு செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலும், வீடு கட்டுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் பொய் சங்கதிகளுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்யும்போது பிரதிவாதிகள் கட்டிடம் கட்டுகிறார்கள் என்றும் அதனால் இடைக்கால தடை உத்தரவு மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/P.K.Dhamayanthi,
District Munsif, Sendhamangalam.